# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப்பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2354/18 - 2023 ඔක්තෝබර් මස 18 වැනි බදාදා - 2023.10.18

*2354/18 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 18 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV*(அ)* - *மாகாண சபைகள்*

### *மாகாண சபை அறிவித்தல்கள்*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 ஊ ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 154 இ ஆம் உறுப்புரையின் கீழ் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 19(5) ஆம் உபபிரிவின் கீழ் செய்யப்படும் அறிவித்தல்**

மேல் மாகாணத்தின் ஆளுநர் றொஷான் குணதிலக ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154ஊ ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 154 இ ஆம் உறுப்புரையின் கீழ் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 19 (5) ஆம் பிரிவின் கீழ் எனக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு இணங்க மேல் மாகாண சபை நிதியத்திற்குரிய நிதியை செலவு செய்து மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி விடயங்கள் தொடர்பாக நிதி வருடத்திற்கு உரியதாக நிதியினைச் செலவு செய்து மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி விடயங்கள் தொடர்பாக நிதி வருடத்திற்குரிய திட்டங்களைத் தயாரிக்கும் போதும் மற்றும் நடைமுறைப்படுத்தும் போதும் உரியதாக்கிக்கொள்ள வேண்டிய விதிகளை இங்கு வெளியிடுவதாக அறிவிக்கிறேன்.

**றொஷான் குணதிலக,**
ஆர்டப்பீ அண்ட் பார் வீஎஸ்வீ யூஎஸ்பீ,
பீஎச்டி (சிறப்பு) எம்ஜஎம் (ஸ்ரீ லங்கா) என்டிசீ பீஎஸ்சீ
விமானப் படையின் மார்ஷல்,
ஆளுநர்,
மேல் மாகாணம்.

மேல் மாகாண சபைக் கட்டடத்தில் அமைந்துள்ள
மேல் மாகாண ஆளுநர் காரியாலயம்,
பத்தரமுல்லை.
*2023, ஒற்றோபர் 16.*


1A - PG 6504 — 21 (2023/10)



*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**விதிகள்**

1. இந்த விதிகள் மேல் மாகாண சபை நிதியம் தொடர்பாக ஒரு குறிப்பிட்ட நிதியாண்டுக்கான அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பதற்கும், அந்தத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான அவளவுகோல்களை அமைப்பதற்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2190/25 ஆம் இலக்க, மற்றும் 2020, ஓகத்து மாதம் 25 ஆம் திகதி அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் உள்ளடக்கப்பட்டிருந்த, மேல் மாகாண சபை நிதியம் தொடர்பாக ஒரு குறிப்பிட்ட நிதியாண்டுக்கான அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பதற்கும், மற்றும் நடைமுறைப்படுத்துவதற்குமுரிய விதிகளை இல்லாதொழிப்பதற்கு ஏற்பாடுகளை ஏற்படுத்துவதற்காக அமுல்படுத்தப்படுகின்றது.

2. இந்த விதிகள் 2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க மேல் மாகாண சபை நிதிக்கு பொருத்தமான அபிவிருத்தித் திட்டங்களை தயாரித்தல் மற்றும் செயல்படுத்துவதற்குரிய விதிகள் என அழைக்கப்படும்.

3. மேல் மாகாண சபை நிதியத்திற்குரிய ஒரு நிதியாண்டுக்கான வருடாந்த அபிவிருத்தித் திட்டம் மற்றும் நடைமுறைத் திட்டத்தை தயாரிக்கும் போது மேல் மாகாணத்தின் ஒவ்வொரு மாகாண அமைச்சும் பின்வரும் அளவுகோல்களின்படி செயல்பட வேண்டும் என்று நான் இதன்மூலம் பணிப்புரை விடுக்கின்றேன்.-

(1) மேல் மாகாண சபை நிதியத்துடன் தொடர்புடைய வருடாந்த அபிவிருத்தித் திட்டங்களை வகுப்பதில் தேசிய கொள்கை கட்டமைப்பிற்கு இணங்க மேல் மாகாணத்திற்கான அபிவிருத்தித் திட்டங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

(2) மத்தியதர விளைவு கட்டமைப்பிற்குள் ஏற்கனவே அடையாளங் காணப்பட்ட முக்கிய பகுதிகள், நிலையான வளர்ச்சி இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை அடைய மேம்பாட்டுத் திட்டம் வடிவமைக்கப்பட வேண்டும்.

(3) அபிவிருத்தித் திட்டங்களைச் செயல்படுத்துவதில், இதுபோன்ற திட்டங்கள் இரு இடங்களில் இடம்பெறுவதை தடுக்க அமைச்சின் விடய எல்லைக்குள் நேரடியாக வரும் திட்டங்களுக்கான திட்டங்களைத் தயாரிப்பதில் கவனம் செலுத்தப்பட வேண்டும். இங்கு திட்ட அதிகாரம் மற்றும் செயற்பாட்டு அதிகாரத்தை சம்பந்தப்பட்ட அமைச்சின் கீழ் உள்ள நிறுவனத்திற்கு வழங்குவதற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

(4) அபிவிருத்தித் திட்டங்களை செயல்படுத்துவதில், அனைத்து திட்டங்களுடனும் தொடர்புடைய திட்ட அதிகாரம் மேற்பார்வைக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.

(5) திட்டங்களின் நிலைத்தன்மையையும் செயல்திறனையும் பாதுகாப்பதற்காக நடவடிக்கை எடுப்பது தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும்.

(6) பயிற்சி மற்றும் கொள்ளளவு மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்துவதற்கான மதிப்பீட்டைக் கொண்ட ஒரு விரிவான திட்ட அறிக்கை திட்ட அதிகாரத்தால் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டும். ரூபா ஐந்து மில்லியன் வரை மேலே உள்ளபடி நடவடிக்கை எடுக்கவேண்டும், அதற்கு அதிகமான மதிப்புள்ள திட்டங்களுக்கான, அவ்வப்போது வழங்கப்படும் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின்படி செயல்பட வேண்டும்.

(7) (i) பல ஆண்டுகள் எடுக்கும் புதிய கட்டுமானத் திட்டங்களைத் திட்டமிடும்போது, திட்டத்தின் மொத்த மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட வேண்டும், தேறிய ரீதியில் மற்றும் ஒவ்வொரு ஆண்டும் முடிக்க எதிர்பார்க்கப்படும் அளவுகள் வரும் ஆண்டுகளில் இந்த திட்டத்திற்கு எவ்வாறு நிதி வழங்கப்படும் என்பதையும் காட்ட வேண்டும்.

(ii) மேலும், ஒரு வருடத்திற்குள் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படும் திட்டங்களுக்கு தேவையான மொத்த ஒதுக்கீட்டை எவ்வாறு பெறுவது என்பது குறித்த சரியான திட்டமிடல் இல்லாமல் திட்டங்கள் தொடங்கப்படக்கூடாது.

(8) ஒரு சொத்தின் புனர் நிர்மாணம் அல்லது கட்டுமானத்திற்கான திட்டங்களைச் சமர்ப்பிக்கும் போது ஒரு அரச அல்லது அரைவாசி அரசுக்குரிய நிறுவனத்தைச் சேர்ந்ததாக இருக்க வேண்டும். மேலும், கட்டடங்களை நிர்மாணிப்பதற்கும் பழுதுபார்ப்பதற்கும் நிதி ஒதுக்கீடு செய்வதற்கு முன்னர், சொத்து எதிர்காலத்தில் தெளிவாகப் பயன்டுத்தக்கூடியது என்பதை உறுதிப்படுத்த வேண்டும். மேலும் எதிர்காலத்தில் கட்டுமானம் எவ்வாறு பராமரிக்கப்படும் என்பது குறித்து தெளிவான திட்டத்தை வகுக்க வேண்டும்.

(9) சந்பந்தப்பட்ட பிரிவுகளுக்காக குறிப்பிடப்பட்டுள்ள செயல்பாடுகளுக்கு மேலதிகமாக அவசரத் தேவைகள் மற்றும் சிறப்பு சந்தர்ப்பங்களில் திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பிக்கும் போது, சம்பந்தப்பட்ட மாகாண அமைச்சின் செலாளரின் அல்லது

செயல் ஆணையத்தின் பரிந்துரையுடன் ஒரு நியாய அறிக்கை ஒன்று பிரதம செயலாளரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இது தொடர்பாக பிரதம செலாளர் திருப்தி அடையும்போது, அந்ததத் திட்டங்களைச் செயல்படுத்த பிரதம செயலாளரின் ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

(10) மாகாண சேவைகள் நடைபெறும் அரசின் பதிவுசெய்யப்பட்ட பொதுக் கட்டடங்களை அபிவிருத்தி செய்வதற்கும் நிர்மாணிப்பதற்கும் செயல்பாட்டு அதிகாரசபையின் நியாயப்படுத்துதல் மற்றும் பரிந்துரையின் பேரில் ஏற்பாடுகள் ஒதுக்கீடு செய்யப்படலாம்.

(11) அதிகாரிகளுக்கு பயிற்சியளிப்பது மாகாண அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் மூலம் மேற்கொள்ளப்படக்கூடாது, மூலதனச் செலவினங்களுக்காக பயன்படுத்தப்பட வேண்டும்.

4. கல்வி விடயத்தின் கீழ் பிரேரணைகளை அடையாளங் காணும் போதும் ஒப்புதல் அளிக்கும் போதும், பின்வரும் அளவுகோல்களைப் பின்பற்ற வேண்டும்.

(1) வேறு நிதி வழிகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் செயற்றிட்டங்களுடன் இரு முறை இடம்பெறாத படி அரச பாடசாலைக் கட்டடங்களின் கட்டுமானம் மற்றும் மேம்பாடு, பாதுகாப்பு வேலிகள் மற்றும் வாயில்கள் அமைத்தல், சுகாதாரம் மற்றும் குடிநீர் வழங்கல், விளையாட்டு மைதானங்கள், குழந்தைகள் பூங்காக்கள் மற்றும் மேம்பாடு உள்ளிட்ட பாடசாலைகளின் அத்தியாவசிய அபிவிருத்தி நடவடிக்கை அத்துடன் வலயக்கல்வி பணிப்பாளரின், பரிந்துரையின் பேரில், பாடசாலையின் வளர்ச்சிக்கு நேரடியாக பங்களிக்கும் கணினிகள், மேசைகள், நாற்காலிகள், வாத்தியக்குழுக் கருவிகள், விளையாட்டு உபகரணங்கள் மற்றும் ஆய்வக உபகரணங்கள் போன்ற அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் வழங்குதல் மற்றும் காணப்படும் உபகரணங்களை பழுது பார்ப்புச் செய்ய முடியும்.

(2) குடும்ப வருமான மட்டம் குறைந்ததினால் பாடப்புத்தகங்கள் மற்றும் கல்வி உபகரணங்களை வாங்க முடியாத மாணவர்களுக்கு புத்தகங்கள், பேனாக்கள், பென்சில்கள், வரைகருவிப் பெட்டிகள் மற்றும் புத்தகப் பைகள் போன்ற கல்வி உபகரணங்களை வாங்குவதற்காக ஆண்டுக்கு ஒரு மாணவருக்கு அதிகபட்சமாக ரூ பத்தாயிரம் வரை வழங்கப்படலாம். குடும்ப வருமான நிலை குறித்து கிராம அலுவலர் மற்றும் அதிபரின் பரிந்துரைகளைப் பெற்ற பிறகு, சம்பந்தப்பட்ட வகுப்பு ஆசிரியர் மூலம் உரிய மாணவருக்கு அந்த நன் கொடைகளை வழங்க இயலும். மேற்கண்ட செயல்பாடுகளில், திணைக்களத் தலைவர், வலயக் கல்விப் பணிப்பாளரிடமிருந்து உறுதிப்படுத்தலைப் பெற வேண்டும். மேலும், பாடசாலையில் உள்ள மற்றைய மாணவர்களுக்கு இது குறித்து தெரிவிக்கப்படக்கூடாது, மேலும் இந்த நிதியைப் பயன்படுத்தி பொதுவாக புத்தகங்கள் மற்றும் உபகரணங்கள் மாணவர்களுக்கு வழங்கப்படக்கூடாது.

(3) மாகாண சபை பாடசாலைகளில் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் அறிவு, திறன்கள் மற்றும் அணுகுமுறைகளை வளர்ப்பதற்கான பயிற்சி பட்டறைகளை நடத்த நடவடிக்கை எடுத்தல் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் மாகாண கல்விப் பணிப்பாளர் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்ட வளவாளர்கள் பாடநெறி தொடர்பான கருத்தரங்குகள் தொடர்பாக வல்லுநர்கள் என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

(4) பரீட்சைகளை இலக்காகக் கொண்டு நடாத்தப்படும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் கருத்தரங்குகளை நடத்தும் போது எதிர்பார்த்த குறிக்கோள்களை பூர்த்தி செய்வதற்கு ஏற்ற முறையில் திட்டத்தை செயல்படுத்தும் வகையில் உரிய கால எல்லையினுள் உரிய நிகழ்ச்சித் திட்டங்களை திட்டமிட வேண்டும்.

(5) செயல்படுத்தக்கூடிய திட்டங்கள் பின்வருமாறு இருக்க வேண்டும்.

(6) பாடசாலை அமைப்பை வினைத்திறனாக பேணிச் செல்வதற்காக நேரடியான பங்களிப்பை வழங்குபவரான கல்வித் துறையுடன் தொடர்புடைய காரியாலயங்களுக்கு பௌதீக வழங்களை வழங்குதல், அபிவிருத்தி மற்றும் தேவையான சூழ்நிலைகளில் அதிகாரிகள் பயிற்சி பட்டறைகளை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல். இங்கு மாகாண கல்வி பணிப்பாளரின் பரிந்துரைகள் மாகாண கல்விச் செயலாளரின் ஒப்புதலுடன் உரிய விடயம் செய்யப்பட வேண்டும். (பயிற்சி பட்டறைகளுக்கான வள பங்களிப்பைப் பெறும் போது உரிய வளப் பங்காளர்கள் உரிய விடயத் துறையில் நிபுணர்களாக இரப்பதை வலய கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் மாகாண கல்விப் பணிப்பாளர்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.)

(i) குழந்தைகளுக்காக புலமைப் பரிசில் வழங்கும் திட்டங்களை நடாத்துதல்.

(ii) பாடசாலைக் கல்வியை விட்டு வெளியேறும் பிள்ளைகளின் திறன்களுக்கு ஏற்ப தொழிற்கல்வியை நோக்கி செலுத்தக்கூடிய சிறப்புத் திட்டங்களைத் திட்டமிடும் போது தேசிய கொள்கைகளுக்கு ஏற்ப திட்டங்களைச் சமர்ப்பித்தல்.

(iii) விசேட கல்வி மற்றும் முறைசாரா கல்வி பிரிவுகளுக்கு தேவையான அத்தியாவசிய உபகரணங்களை வழங்குதல்.

(iv) அரசின், மாகாண சபைகளின் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் உள்ள முன்பள்ளிகளின் கட்டடங்களைஅபிவிருத்தி செய்வதை மேற்கொள்ள முடியும்.

(v) ரூபா ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் என்ற உச்ச எல்லையின் கீழ் முன்பள்ளி ஆசிரியர் பயிற்சித் திட்டங்களை நடாத்துதல்.

(vi) முன்பள்ளி நியதிச்சட்டத்தின் கீழ் பிரதேச செயலகப் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட முன்பள்ளிகளுக்கு மேசை, நாற்காலிகள் மற்றும் பிற அத்தியாவசிய உபகரணங்களை ரூபா ஐம்பதாயிரம் என்ற உச்ச எல்லையின் கீழ் வழங்குதல். (இந்த முன் பள்ளிகள் குறைந்தபட்சம் 3 ஆண்டுகள் தொடர்ச்சியாக பேணிச் செல்லப்படுவதாகவும், மற்றும் முன் பள்ளியின் மாணவர்களுக்கு அத்தியாவசிய உபகரணங்களை வழங்க போதுமான வருமானம் கிடைக்கப்பெறாத முன்பள்ளியாக இருக்க வேண்டும்.)

(vii) அடையாளங் காணப்பட்ட தேவைகளைக் கொண்ட பாடசாலைப் பிள்ளைகளின் ஊட்டச்சத்து நிலையை அதிகரிப்பதற்கான திட்டங்களை நடாத்துதல், மற்றும் பொருள் உதவி மற்றும் பிற தேவைகளை வழங்குதல்.

(viii) தேசிய உணவு பாதுகாப்பு மற்றும் பாடசாலை மட்டத்தில் போதைப்பொருள் தடுப்புக்கு தேவையான திட்டங்களை அடையாளங் கண்டு திட்டமிடுதல் மற்றும் செயல்படுத்துதல்.

5. காணி விடயத்தின் கீழ் பிரேரணைகளை அடையாளங் காணும் போதும் ஒப்புதல் அளிக்கும்போதும் பின்வரும் அளவுகோல்களின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(1) சுற்றுச்சூழல் பாதுகாப்பில் அதிக கவனம் செலுத்தி காணி மறுசீரமைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான பிரேரணைகளைச் சமர்ப்பித்தல்.

(2) நிலங்கள் தொடர்பான சட்டங்களை அமுல்படுத்துதல், அரச நிலங்களை தனியார் அல்லது நிறுவன மட்டத்தில் கையளித்தல் மற்றும் காணித் தகவல்களை பேணும் விடையங்களுக்குரிய மூலதன வடிவிலான முதலீடுகளுக்கான திட்டங்களைத் திட்டமிடுதல் மற்றும் சமர்ப்பித்தல்

(3) கொளனி வாசிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக பொது உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும் நிர்மாணிப்பதற்கும் முன்மொழிவுகளை முன்வைத்தல்.

6. உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகத்தின் கீழ் பிரேரணைகளை அடையாளங் காணும் போதும் ஒப்புதல் அளிக்கும் போதும், பின்வரும் அளவுகோல்களின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(1) உள்ளூராட்சித் தாபனங்களின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள பொதுவான கிராமப்புற வீதிகளின் மேம்பாடு மற்றும் பராமரிப்பு மற்றும் உரிய கிராமப்புற வீதிகளில் சிறிய பாலங்கள் மற்றும் வோக்குகள் போன்ற பிற மேம்பாட்டு நடவடிக்கைகள்.

(2) சன சமூக நிலையங்கள், வாராந்த சந்தைகள், குடிநீர் வழங்கல், நூலக சேவைகள், தகன சாலை, மயானங்களை ஒழுங்கு படுத்துதல் மற்றும் மேம்பாடு, மகப்பேறு கிளினிக்குகள், முன்பள்ளிகள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் பூங்காக்கள் போன்ற உள்ளூராட்சி சேவைகளின் மேம்பாடு மற்றும் பராமரிப்பு

(3) உள்ளூராட்சி அதிகாரப் பிரதேசத்தினுள் சுகாதார மற்றும் சுற்றுப்புற சுகாதாரத்தை பராமரிப்பதற்காக சமூகத்தினை அறிவுறுத்துதல், கழிவு முகாமைத்துவம், பொது கழிப்பறைகள், வடிகால் அமைப்புகள் மற்றும் கால்வாய்களின் அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு.

(4) உள்ளூராட்சி அமைப்புகளின் கட்டமைப்பை வினைத்திறனாகவும் முறையாகவும் பராமரிக்க தேவையான வசதிகளை வழங்குதல்.

(5) அரச மற்றும் உள்ளூராட்சித் தாபனங்களின் காணிகளில் அமைந்துள்ள சன சமூக நிலையங்கள், பொதுக் கட்டடங்களுக்கு நீர் மற்றும் மின்சார வசதிகளை வழங்குதல்.

(6) உள்ளூராட்சித் தாபனங்களின் சேவை நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் திட்டங்களை செயற்படுத்துவதன் செயல்திறனை மேம்படுத்துவதற்கும் வழிநடத்துவதற்கும் அதிகாரிகள் மற்றும் சமூகத்தின் ஊக்கப்படுத்தும் நடவடிக்கை.

(7) உள்ளூராட்சி சேவை வழங்கலின் செயற்திறனை மேம்படுத்தத் தேவையான இயந்திரங்களை வழங்குதல் மற்றும் அலகுகளை பராமரித்தல்.

(8) கழிவு முகாமைத்துவத்திற்குரிய கழிவு பிரிப்புத் தொட்டிகளையும் கொம்போஸ்ட் தொட்டிகளையும் வழங்குதல்.

(9) உள்ளூராட்சி நிறுவனங்களால் நிறைவேற்ற முடியாத பெரிய அளவிலான திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளல்.

(10) கழிவுப்பொருட்கள் முகாமைத்துவத்திற்குத் தேவையான வசதிகள் மற்றும் உபகரணங்களை வழங்குதல்.

(11) பிரதேச சபையில் ஒழுங்கான முறையில் பதிவு செய்யப்பட்டு இரண்டு வருடங்களை விட அதிகமாக தொடர்ச்சியாக பேணப்படும் நாற்காலி மற்றும் தற்போது ஒன்று சேரக்கூடிய அட்டைகளை ஒரு இலட்சம் என்ற உச்ச எல்லையின் கீழ் அந்த உபகரணங்களை வழங்குதல்.

7. விவசாய விடயத்தின் கீழ் பிரேரணைகளை அடையாளங் காணும் போதும் ஒப்புதல் அளிக்கும் போதும், பின்வரும் அளவுகோல்களின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(1) மாகாணத்தில் விவசாயப் பயிர்களின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்காக பதிவு செய்யப்பட்ட விவசாய அமைப்புகளுக்கு பயனாளிகளின் பங்களிப்பின் மொத்த மதிப்பில் அதிகபட்சமாக 30% வரை ரூபா ஐந்து இலட்சம் வரை விவசாய உபகரணங்களை வழங்குதல்.

(2) மாகாணத்தில் விவசாயப் பயிர்களின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்காக விவசாயிகளுக்கு விதை, நாற்றுப் பொருள் மற்றும் உள்ளீடுகளை பயனாளிகளின் பங்களிப்பின் மொத்த மதிப்பில் 30% வரை ரூபா ஒரு இலட்சம் என்ற உச்ச அளவில் வழங்குதல்.

(3) உற்பத்தி செய்யப்பட்ட விவசாயப் பயிர்களை விற்பனை செய்வதை மேம்படுத்துவது தொடர்பான திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பித்தல்.

(4) வீடு மட்டத்தில் நச்சுத் தன்மையற்ற தரமான பழங்கள் மற்றும் காய்கறிகளின் பயன்பாட்டை சுலபமாக்க அசேதனப் பசளைகளின் பயன்பாட்டை அதிகரிப்பது தொடர்பான திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பித்தல்.

(5) பெறுமதி கூட்டப்பட்ட தயாரிப்புகள் மற்றும் அவற்றுக்கான சந்தை வசதிகளுக்காக திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பித்தல்.

(6) விவசாயிகள், உழவர் அமைப்புகள் மற்றும் விரிவாக்க சேவைகளுடன் தொடர்புடைய அலுவலர்களுக்கு பயிற்சித் திட்டங்களை நடாத்துதல்.

(7) பாடசாலைகள், வீடுகள் மற்றும் அரசு நிறுவனங்களுடன் தொடர்புபட்ட முறையில் வீட்டுத் தோட்டக்கலையை ஊக்குவிப்பதற்கான பயிற்சித் திட்டங்களை நடாத்துதல் மற்றும் தேவைப்படும் போது உள்ளீடுகளை வழங்குதல்.

(8) தரமான விதைகளின் நாற்றுக்களின் கிடைக்கும் தன்மையை அதிகரிப்பதன் மூலமும், உள்ளீடுகள் சுலபமாகக் கிடைக்கக்கூடிய வழிகளை ஏற்படுத்துவதன் மூலமாகவும் மாகாணத்தில் பயிர் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிக்க நடவடிக்கை எடுப்பது.

(9) வேளாண்மை வணிகம் மற்றும் தொழில்முனைவோரை மேம்படுத்துவதற்கும், அறுவடைக்கு பிந்திய விளைச்சலுக்கு ஏற்படும் இழப்புகளைக் குறைப்பதற்கும் திட்டங்களைச் செயல்படுத்துதல்.

(10) விவசாயத்தை நோக்கி இளைஞர் சமூகத்தை திசை திருப்புவதற்கான திட்டங்களைச் சமர்ப்பித்தல்.

(11) சுற்றாடலை நேசிக்கும் விவசாயப் பிரேரணைகளை முன்வைத்தல்.

(12) பயிரிடப்படாத நிலங்களை சாகுபடிக்கு திறம்பட பயன்படுத்துவது தொடர்பான திட்டங்களை செயல்படுத்துதல்.

(13) காலநிலை மாற்றத்திற்கு முகம்கொடுக்குமாறு மேம்பட்ட விதைகள் மற்றும் நாற்றுப் பொருட்களை விவசாயிகளுக்கு மத்தியில் பிரபல்யம் செய்தல்.

(14) சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதிப்பைக் குறைக்கும் வகையில் எவ்வாறு பயிரிட வேண்டும் என்பது தொடர்பாக மக்களை அறிவுறுத்துதல்.

(15) விவசாயிகளுக்கு புதிய விவசாய அறிவைப் பரப்புதல்.

(16) விவசாயத்திற்கு உரிய கட்டடங்களின் கட்டுமானம் மற்றும் மேம்பாட்டுக்கான திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பித்தல்.

(17) மேல் மாகாணத்தில் விவசாய ஆராய்ச்சி மற்றும் சோதனைகளுக்கு தேவையான வசதிகளை வழங்குதல்.

(18) மேல் மாகாண விவசாயத் திணைக்களத்தின் கீழ் பண்ணைகளை கூட்டுப் பண்ணைகளாக நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்தல்.

(19) மேல் மாகாண விவசாயத் திணைக்களத்தின் கீழ் பண்ணைகளுக்காக விவசாய இயந்திரங்களை வழங்குதல் மற்றும் தொடர்ச்சியான சேவைகளை பராமரித்தல்.

8. சிறு நீர்ப்பாசன விடயத்தின் கீழ் பிரேரணைகளை அடையாளங் காணும் போது ஒப்புதல் அளிக்கும்போது, பின்வரும் அளவுகோல்களின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(1) விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் விவசாய நிலங்களுக்கு நீர் வழங்கும் போது பண்ணை நிலங்களுக்கு நீர் கொண்டு செல்லத் தேவையான வசதிகளை வழங்குதல்.

(2) தற்போதுள்ள மற்றும் புதிய நீர்ப்பாசன முறைகளை பராமரித்தல் மற்றும் மேம்படுத்துதல் மற்றும் அதிகபட்ச உழைப்பினால் பதிய நீர்ப்பாசனத் திட்டங்களை உருவாக்குதல்.

(3) நீர் முகாமைத்துவம் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வுத் திட்டங்களை நடாத்துதல்.

(4) சிறு நீர்ப்பாசனத்தின் கட்டுமான அல்லது புதுப்பித்தல் பணிகளை முடிக்க எதிர்பார்க்கும் நீர்ப்பாசனம் அல்லது பிற கூறுகளுக்கான திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பித்தல்.

(5) விவசாய நிலங்களுக்கு பிரவேசிக்க விவசாய வீதிகள் மற்றும் உழவியந்திர பாதைகளை அமைத்தல்.

(6) நீர்ப்பாசன நிர்மாணம் மற்றும் பராமரிப்பு தொடர்பான இயந்திர உபகரணங்களை வாங்குதல் மற்றும் தொடர்ச்சியான சேவை வழங்கல்களை பராமரித்தல்.

9. கைத்தொழல் விடயத்தின் கீழ் பிரேரணைகளை அடையாளங் காணும் போதும் ஒப்புதல் அளிக்கும் போதும், பின்வரும் அளவுகோல்களின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(1) பல்வேறு வரம்புகளை உள்ளடக்கியவாறு உள்ளூர் பாரம்பரியத் தொழில்களை ஊக்குவிப்பதற்கும், அத்தகைய தயாரிப்புகளின் தரத்தை மேம்படுத்துவதற்கும் ஏற்ற முறையில் பதிவு செய்யப்பட்ட இயங்கும் நிலையில் உள்ள சிறு தொழில்துறை சங்கம், உறுதியாக அடையாளங் காணப்பட்ட திட்டங்களுக்கு தேவையான உள்ளீடுகள் மற்றும் உபகரணங்களை வாங்குவதற்கு ஊக்கத்தொகை வழங்கப்படலாம். அந்த மதிப்பில் 30% பங்களிப்பு சம்பந்தப்பட்ட சங்கத்தினால் செலுத்தப்பட வேண்டும். மற்றும் வழங்கக்கூடிய அதிகபட்ச உதவி மதிப்பு மூன்று இலட்சம் ரூபாய் ஆகும். இதற்காக திட்ட அறிக்கையுடன் தொடர்புடைய தொழில்துறை ஊக்குவிப்பு அதிகாரியின் பரிந்துரையும் கட்டாயமாகும். இரைதவிட, உள்ளூர் பாரம்பரியத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஒரு பயனாளிக்கு உபகரணங்கள் வழங்கப்பட்டால் பயனாளிகளின் பங்களிப்பின் மொத்த மதிப்பில் 30% வரை ரூபா ஒரு இலட்சம் என்ற உச்ச அளவில் வழங்கப்பட வேண்டும்.

(2) அந்த நிறுவனங்களின் தயாரிப்புகளை சந்தைப்படுத்த சந்தைகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் நடமாடும் சந்தைகள் மற்றும் கண்காட்சிகளை நடத்த பங்களிப்புச் செய்தல்.

(3) புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதற்கான பிரேரணைகளை முன்வைத்தல்.

(4) தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் திறன்களை மேம்படுத்த பயிற்சித் திட்டங்களை நடத்தும்போது இலக்கு குழுவின்படி வள பங்களிப்பாளர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அதற்காக திட்டத்தின் தன்மைக்கு இணங்க திட்ட மற்றும் நடைமுறை அதிகாரிகளின் முன் அனுமதி பெறப்பட வேண்டும். வளவாளர் துறையில் பொருத்தமான தொழில்முறை அனுபவமுள்ள ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ்கள் உள்ள ஒரு நிபுணராக இருக்க வேண்டும். அவ்வாறான ஏற்றுக் கொள்ளப்பட்ட மேலும், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ்கள் சமாப்பிக்க முடியாத நிபுணராகுமிடத்து அதற்காக உரிய விடயப் பொறுப்பு அமைச்சின் செயலளாரின் முன்னனுமதி பெறப்பட வேண்டும்.

(5) சுயதொழல் செய்யும் அல்லது சுயதொழில் செய்ய விரும்பும் நபகர்களின் பயிற்சி வகுப்புகளுக்கு ஒரு நபருக்கு அதிகபட்சம் ரூபா ஐம்பதாயிரம் வரை ஏற்பாடு செய்யப்படலாம், வேறு முறைகளுக்கு உட்படாத மற்றும் இதற்கு முன் அவ்வாறான அனுசரணைப் படி பெறாதவர்கள் மற்றும், பின்வரும் வகைகளைச் சேர்ந்த குறைந்த வருமானம் ஈட்டுபவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

(i) குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த 18 - 45 வயதுக்குட்பட்ட நபர்கள்

(ii) விதவைகள்

(iii) விசேட தேவைகள் உள்ளவர்கள்

(6) குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு மாகாண அபிவிருத்தி நிதி உதவியின் கீழ் சுயதொழில் உபகரணங்களாக நேரடி மானியங்களை வழங்குதல் குறைந்தபட்ச பயனாளிகளின் பங்களிப்பான 20% மீது அரசாங்க பங்களிப்பாக அதிகபட்சம் ஒரு இலட்சம் ரூபாய்க்கு உட்பட்ட சுயதொழில் உபகரணங்களை வழங்குதல்

இந்த பிரிவின் கீழ் எது குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், சிறப்பு சூழ்நிலையின் கீழ் 20% ஆக குறைந்தபட்ச பயனாளிகளின் பங்களிப்பு எவ்வளவு சதவீதம் இருக்க வேண்டும் என்பது தொடர்பாக விவகாரத்துக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் முன்வைக்கும் உண்மைகளைக் கருத்தில் கொண்டு தலைமைச் செயலாளர் முடிவெடுக்கலாம்.

மேலும், நேரடி மானியம் பெறும் பயனாளிகளின் பட்டியலை ஒப்புதலுக்காக சமர்ப்பிக்க வேண்டும், மேல் மாகாணத்தில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழல்துறையினரை ஊக்குவிக்கும் பணி, அவர்களுக்கு தொழில் முனைவோர் பயிற்சி மற்றும் தொழில்நுட்ப பயிற்சிகளை வழங்குதல் நிதி சேவைகள் மற்றும் நிதிக் கடன் வசதிகளை வழங்குதல் மற்றும் அவர்களுக்கு ஓய்வூதியம் தயாரித்தல், வர்த்தகர்களின் தகவல்களை வலையமைத்து, மாகாணத்தின் கண்டுபிடிப்பாளர்களைச் சேகரிக்கும் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு, அவர்களுக்கான நிகழ்ச்சிகளை நடத்தி, அவர்களை மத்திய அரச நிறுவனங்களுடன் இணைத்து, தேசிய வளர்ச்சிக்குப் பங்களிப்பதில் கவனம் செலுத்த வேண்டும். திட்டத்துடன் தொடர்புடைய மூலதன பொருட்கள் மட்டுமே வழங்கப்பட வேண்டும். நுகர்வோர் பொருட்களை வழங்கக்கூடாது.

10. சுற்றாடல் விடயத்தின் கீழ் பிரேரணைகளை அடையாளங் காணும் போதும் ஒப்புதல் அளிக்கும் போதும், பின்வரும் அளவுகோல்களின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(1) மேல் மாகாணத்தில் தற்போதுள்ள சுற்றுச்சூழல் அமைப்பை நிலையான முறையில் பராமரித்தல்.

(2) மாகாணத்தில் வசிக்கும் சமூகத்திற்கான நகர்ப்பற தரை வனத் தோட்டங்கள், உள்ளூர் சமூகத்திற்கான மூலிகைத் தோட்டங்கள் உள்ளிட்ட சூழல் பூங்காக்களை நிறவுதல்.

(3) சாலைகளின் இருபுறமும் பசுமையான பாதைகள் அமைத்தல்.

(4) அரச, அரச சார்பற்ற மற்றும் தனியார் நிறுவங்களுடன் இணைந்து சுற்றுச்சூழல் மேம்பாட்டுக்கான கூட்டு நடவடிக்கைகளை நிறுவுதல், பசுமைக் கிராமங்கள் மற்றும் மூலிகை கிராமங்களை நிறுவுதல்.

(5) நீர் மூலாதாரங்கள், கால்வாய்கள் மற்றும் நீரோடைகள், ஏரிகள் மற்றும் குளங்கள், கடற்கரைகள் மற்றும் தடாகங்கள் போன்ற நீர் வாழ் சுற்றுச்சூழல் அமைப்புகளின் பாதுகாப்பு மற்றும் மேம்பாடு.

(6) மேல் மாகாணத்தில் அதிகமான சுற்றுச்சூழல் பிரச்சினைகளை கண்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்ய பங்குதாரர்களான நிறுவனங்கள்/தனிநபர்களுடன் ஒருங்கிணைந்து திட்டங்களை செயற்படுத்துதல்.

(7) சுற்றாடல் தினத்தைக் கொண்டாடுதல்.

(8) தேசிய மட்டத்திலான சுற்றாடல் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் அதனுடன் தொடர்பான திட்டங்களை செயற்படுத்துதல்.

(9) அழியும் மற்றும் ஆபத்திற்கு உட்பட்ட உயிரினங்கள் தாவரங்கள் மற்றும் விலங்குகளுக்கான பாதுகாப்புச் செயற்திட்டங்களை செயற்படுத்துதல்.

11. கலாசாரம் மற்றும் கலை விடயத்தின் கீழ் பிரேரணைகளை அடையாளங் காணும் போதும் ஒப்புதல் அளிக்கும் போதும், பின்வரும் அளவுகோல்களின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(1) மாகாணத்தில் காணப்படும் கலாசார பாரம்பரியத்தையும் உரிமைகளையும் பாதுகாத்து எதிர்கால தலைமுறையினருக்கு வழங்குவதற்கு உதவும் செயற்திட்டங்களை அறிமுகப்படுத்துதல்.

(2) ஆகக்குறைந்த வசதிகளைக் கொண்ட பதிவு செய்யப்பட்ட மத வழிபாட்டுத் தளங்கள் மற்றும் அற நெறிப்பாடசாலைகளின் அத்தியாவசிய மேம்பாட்டு நடவடிக்கைகளுக்காக ரூபா ஐந்து இலட்சம் என்ற உச்ச அளவின் கீழ் ஏற்பாடுகளை வழங்க முடியும். அவ்வேளையில் இதற்கு முன்னர் நிதி கிடைக்கப்பெறாத வழிபாட்டுத் தலங்கள் மற்றும் அறநெறிப் பாடசாலைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

(3) ஆகக்குறைந்த வசதிகளுடன் காணப்படும் பதிவு செய்யப்பட்ட அறநெறிப் பாடசாலைகளுக்கு அறநெறி நடவடிக்கைகளை பேணிச் செல்வதற்குத் தேவையான உபகரணங்கள் வழங்கப்படலாம் என்பதுடன் பிரதேச செயலாளர் பிரிவின் மேல் மாகாண சபை அரச சேவையின் கலாசார அலுவலரின் பரிந்துரையின் பேரில் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒரு அற நெறிப்பாடசாலைக்கு அதிகபட்சமாக ரூபா இரண்டு இலட்சம் உச்ச அளவாக ஒதுக்கப்படலாம்.

(4) பாரம்பரிய நடனங்கள் மற்றும் பிற கலை நடவடிக்கைகளின் பாதுகாப்பு மற்றும் மேம்பாடு ஆகிய வைபவமொன்றிற்கு அல்லது ஒரு பாரம்பரிய நடனக் குழுவிற்குத் தேவையான பொருட்களை வழங்க அதிகபட்சமாக ரூபா இரண்டு இலட்சம் ஏற்பாட்டினை ஒதுக்க முடியும். அதிகபட்ச ஒதுக்கீட்டு வரம்பைத் தாண்டி ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டிய சந்தர்ப்பங்களில் மாகாணத் திட்டமிடல் குழுவின் ஒப்புதலைப் பெற்ற பின்னர் தொடர்புடைய ஏற்பாட்டினை ஒதுக்குதல்.

(5) அரசின் பதிவு செய்யப்பட்ட கலை நிறுவனத்திற்காக சங்கீதப் பொருட்களை வழங்குவதற்கு பயனாளிகளின் பங்களிப்பில் 20% இன் கீழ் மாகாண கலாச்சார அலுவலரின் பரிந்துரையின் பேரில் அதிகபட்சமாக ரூபா ஒரு இலட்சம் வரை ஏற்பாடு செய்ய நடவடிக்கை எடுத்தல்.

(6) மாகாண சபைக்குச் சொந்தமான கலாச்சார மையங்களின் வளர்ச்சிக்கு மற்றும் அவற்றின் செயல்பாடுகளை மேம்படுத்துவதற்கு உபகாரம் வழங்கும் திட்ட முன்மொழிவுகளை செயல்படுத்துதல்.

(7) பல்வேறுபட்ட கலாச்சார மற்றும் கலைத் துறைகளில் சிறப்பான இயலுமையினைக் காட்டிய நபர்களைப் பாராட்டுவதற்காக பிரதேச மட்டத்தில் உச்சமாக ரூபா நான்கு இலட்சத்தினை ஒதுக்குவதற்கும், உச்ச அளவினைத் தாண்டும் மாகாண அல்லது மாவட்ட மட்டத்திலான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளரின் பரிந்துரைகளில் பிரதம செயலாளர் திருப்தி அடையும் சந்தர்ப்பத்தில், அந்தப் பிரேரணைக்கு பிரதம செயலாளர் ஒப்புதல் வழங்க வேண்டும்.

(8) சமூகத்தின் கலைத் திறமைகளை மேம்படுத்துவதற்கும் கண்டுகளிப்பதற்கும் பிரதேச ரீதியில் அதிகபட்சமாக இரண்டு இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யும் திட்டங்களைத் திட்டமிடுதல். எவ்வாறயினும், இந்த விடயத்திற்கு விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளரின் பரிந்துரையில் பிரதம செயலாளர் திருப்தி அடையும் சந்தர்ப்பத்தில் உச்ச அளவான ஒதுக்கீட்டு வரம்பை மீறி, பிரதம செயலாளரின் ஒப்புதலுடன் ஐந்து இலட்சம் ரூபா வரை ஒதுக்கீடு செய்ய முடியும்.

(9) பாரம்பரிய நடனங்கள் மற்றும் பிற கலைகளின் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டிற்கும், மத கலாச்சார மற்றும் கலை நடவடிக்கைகளின் கீழ் வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்டுள்ள நீண்ட காலமாக நடைபெற்றுவரும் ஊர்வலங்கள் அல்லது வரலாற்று ரீதியாக இடம்பெற்றுவரும் ஊர்வலங்களுக்கும் அனுசரணை நிதியுதவி வழங்கப்படலாம், இவற்றைத் தேர்ந்தெடுக்கும்போது மாகாண கலாச்சார அதிகாரிகளின் பரிந்துரைகளைப் பெற வேண்டும், மேலும் இந்தத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது மாகாண கலாச்சார அமைச்சின் கீழ் அல்லது பொருத்தமான அதிகாரத்தின் கீழ் செயல்படுத்தப்பட வேண்டும்.

(10) பிரதேச செயலாளர் காரியாலயங்களின் மூலம் ஒழுங்கு செய்யப்படும், வலய மட்ட மற்றும் மாவட்ட மட்டத்தில் நடைபெறும் வருடாந்த இலக்கிய விழாக்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய நிகழ்வுகளுக்கு அதிகபட்சம் ஒரு இலட்சம் ரூபா வரை ஏற்பாடினை ஒதுக்கீடு செய்யலாம்.

(11) மேல் மாகாணத்தில் நிரந்தரமாக வசிப்பவர்கள் அல்லது முதியவர்கள் அல்லது முழுமையான அல்லது பகுதியளவு ஊனமுற்றவர்கள் அல்லது வேறு ஏதேனும் பேரிடர்பளால் பாதிக்கப்பட்ட சிறப்புப் பணியை ஆற்றிய கலைஞர்களின் பாராட்டுக்காக ஒரே ஒரு முறை மட்டும் அதிகபட்சம் ஒரு இலட்சம் ரூபா என்பதன் கீழ் நிதி உதவி வழங்குதல்.

12. சுகாதார மற்றும் உள்நாட்டு வைத்திய விடயத்தின் கீழ் பிரேரணைகளை அடையாளங் காணும் போதும் ஒப்புதல் அளிக்கும் போதும், பின்வரும் அளவுகோல்களின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(1) மருத்துவமனைகள், சுகாதார வைத்திய அலுவலகங்கள், மத்திய மருந்தகங்கள், மருந்துக் களஞ்சியங்கள், உத்தியோக பூர்வ இல்லங்கள், சிகிச்சைக் கட்டடங்கள், உட்பிரவேச சாலைகள், வடிகால் அமைப்புகள் மற்றும் பிற சுகாதார துறைகளுக்குரிய உட்கட்டமைப்பு வசதிகளின் நிர்மாணம் அல்லது புனர்வாழ்வு நடவடிக்கைக்காக சமரப்பிக்கப்படும் செயற்திட்டங்களை செயல்படுத்துதல்.

(2) அரச சுகாதார நிறுவனங்களில் பொது சுகாதார சேவைகளை முறையாக பராமரிக்கத் தேவையான உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களை வழங்குதல்.

(3) நோய் நிவாரணம் மற்றும் சிகிச்சை சேவைகளின் தரத்தை வலுப்படுத்தவும் மேம்படுத்தவும் தேவையான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம், அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் உற்பத்தித்திறன் நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்தல், கர்ப்பிணிப் பெண்கள், 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் மற்றும் பள்ளி மாணவர்களின் ஊட்டச்சத்து நிலை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்களை நடத்துதல்.

(4) நோய்த் தடுப்பு மற்றும் சிகிச்சை சேவைகளை வலுப்படுத்த தேவையான தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துதல்.

(5) பாரம்பரிய மருத்துவ முறைகளைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல்.

(6) மூலிகைத் தோட்டங்கள் மற்றும் மருந்துகளின் உற்பத்தியை மேம்படுத்த நடவடிக்கைகளை எடுத்தல்.

(7) குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்கு பொருள் உதவியை ஒரு பயனாளி குடும்பத்துக்கு அதிகபட்சம் ஒரு இலட்சம் ரூபா என்ற வகையில் மற்றும் பயனாளிகளின் பங்களிப்பில் 25% என்ற முறையில் பொருளுதவிகளை வழங்குதல்.

13. நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவை விடயத்தின் கீழ் பிரேரணைகளை அடையாளங்காணும் போதும் ஒப்புதல் அளிக்கும் போதும், பின்வரும் அளவுகோல்களின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(1) நன்நடத்தைப் பொறுப்பில் உள்ள பிள்ளைகளின் அன்றாடத் தேவைகளையும் மற்றும் நலனையும் உறுதி செய்தல்.

(2) நன்நடத்தைப் பொறுப்பில் உள்ள பிள்ளைகளின் சமூகமயமாக்கலின்போது பிள்ளைகளுக்குத் தேவையான அறிவு மற்றும் திறன்களை வளர்ப்பதற்கான திட்டங்களை செயல்படுத்துதல்.

(3) பிள்ளைகள் நன்நடத்தைக்குட்படுவதை தடுக்க தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

(4) நன்நடத்தை திணைக்களத்திற்கு சொந்தமான கட்டடங்கள் மற்றும் பதிவு செய்யப்பட்ட சிறுவர் இல்லங்களை நிர்மாணித்தல் அல்லது புனர் நிர்மாண நடவடிக்கையினை மேற்கொள்ளல்.

(5) அநாதை, கைவிடப்பட்ட, உதவியற்ற மற்றும் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட குழந்தைகளுக்கு பாதுகாப்பு மற்றும் பராமரிப்பை வழங்குவதன் அவசியத்தை அறிந்த ஊழியர்களின் குணம் மற்றும் செயற்திறனை மேம்படுத்த தேவையான பயிற்சித் திட்டங்கள் மற்றும் விழிப்புணர்வுத் திட்டங்களை செயல்படுத்துதல்.

(6) குழந்தைகள் இல்லப்படுத்தலை தடுத்து குடும்பத்திற்குள் தக்கவைத்துக் கொள்ளும் நோக்கமாகக் கொண்டு குறைந்த வருமானம் ஈட்டும் குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளின் பெற்றோர், பாதுகாவலர்களுக்கு 20% குறைந்தபட்ச

பயனாளிகளின் பங்களிப்பின் கீழ் சுயதொழில் உபகரணங்களை வழங்க அரசு பங்களிப்பு அதிகபட்சம் ரூபா ஒரு இலட்சம் வரை மூலதனஉதவித்தொகை வழங்குதல்.

14. மின்சக்தி மற்றும் எரிசக்தி விடத்தின் கீழ் பிரேரணைகளை அடையாளங் காணும் போதும் ஒப்புதல் அளிக்கும் போதும், பின்வரும் அளவுகோல்களின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(1) மின் இணைப்புகளின் விரிவாக்கம், மின் இணைப்புகளை தனிமைப்படுத்துதல், மின் துணை மின் நிலையங்களை நிறுவுதல் மற்றும் மின் கம்பங்களை இடமாற்றம் செய்தல்.

(2) குறைந்த வருமானம் பெறும், பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகள் மற்றும் சிறப்புத் தேவைகள் உள்ள நபர்கள் உள்ள வீடுகளுக்காக பிரதேச செயலாளரின் பரிந்துறையின் பேரில் தேசிய மின்சார கட்டமைப்பில் மின் இணைப்பு வழங்க முப்பத்தைந்தாயிரம் ரூபா என்ற உச்ச அளவின் கீழ் வழங்குதல். இந்தக் கொடுப்பனவு மின் இணைப்பு வழங்கும் தாபனத்திற்கு மட்டும் செலுத்தப்பட வேண்டும்.

(3) தேவையான சந்தர்ப்பங்களில் மாற்று எரிசக்தி வழிகளை அறிமுகப்படுத்துதல், அபிவிருத்தி செய்தல் தேசிய மின்சார அமைப்பினைத் தொடர்புபடுத்துதல்.

(4) உள்ளூராட்சித் தாபனங்களுக்குரிய அல்லது உள்ளூராட்சித் தாபனங்களுக்கு உரிமை கையளிக்கப்பட்ட பொதுச் சேவை வசதிகள் வழங்கும் தாபனங்கள் மற்றும் அரச காணிகளில் அமைந்துள்ள சனசமூக நிலையங்களுக்கு மின்சாரம் வழங்குதல்.

15. மாகாண வீதி விடயத்தின் கீழ் பிரேரணைகளை அடையாளங் காணும் போதும் ஒப்புதல் அளிக்கும் போதும், பின்வரும் அளவுகோல்களின்படி நடவடிக்கை எடுக்க முடியும்.

(1) புதிய சி மற்றும் டி வகை வீதிகளை அமைத்தல், காணப்படும் வீதிகளை மேம்படுத்துதல் மற்றும் வீதிகளை முறையாக பராமரித்தல்.

(2) வீதி அபிவிருத்தியின் போது அதன் நிலைத் தன்மையைப் பாதுகாக்க வீதியின் இருபுறமும் வடிகால் அமைப்பைக் கொண்டபோக்குகள் மற்றும் சிறிய பாலங்களை புனரமைத்தல்.

(3) மாகாண வீதிகள், சிறிய பாலங்கள், போக்குகள் மற்றும் வடிகால் அமைப்புகளின் கட்டுமானம் மற்றும் மேம்பாடு.

(4) உரிய நிறுவனங்களின் பரிந்துரையின்படி சரியான வீதி அடையாளங்களை நிறுவுதல்.

16. வீடமைப்பு மற்றும் நிர்மாண விடயத்தின் கீழ் பிரேரணைகளை அடையாளங் காணும் போதும் ஒப்புதல் அளிக்கும் போதும், பின்வரும் அளவுகோல்களின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(1) குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு மீதமாகவுள்ள வீட்டின் வேலை மற்றும் ஒரு வீட்டின் பழுதுபார்ப்புக்கான நிலத்தின் உரிமையை உறுப்படுத்திபின்னர், ஒரு பயனாளி குடும்பத்திற்கு ஆகக் கூடியது ஒரு இலட்சம் ரூபா மற்றும் ஆகக் குறைந்தது ரூபா முப்பத்தையாயிரத்தின் கீழ் அனுசரணை நிதி அல்லது பொருளுதவியினை வழங்க முடியும்.

விசேட பேரழிவு ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் (மண்சரிவு, தீ, சூறாவளி, வெள்ளம் போன்றவை) பிரதேச செயலாளரின் விசேட பரிந்துறையின் பேரில் அதிகபட்சமாக ஐந்து இலட்சம் ரூபா வழங்க பிரதம செயலாளரின் அனுமதியினைப் பெற வேண்டும்.

பின்வரும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் குடும்பங்கள் மட்டுமே மேற்கண்ட உரிமை கோரல்களுக்கு தகுதியுடையவையாகும். இந்த விடயங்களை கிராம அலுவலரின் சான்றிதழின் கீழ் உறுதிப்படுத்த வேண்டும்.

(i) மாணவர்கள், அங்கவீனம் உள்ள குறைந்த வருமானம் பெறுபவர்கள் உள்ளமை.

(ii) குடும்ப வருமானம் உழைப்பவர் மரணம் அடைந்ததன் காரணமாக உதவியற்றவர்களாக மாறுதல்.

(iii) வீட்டுத் தலைவரானவர் குறைந்த வருமானம் கொண்ட குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பெண்.

17. சமூக நலன்புரி விடயத்தின் கீழ் பிரேரணைகளை அடையாளங்காணும் போதும் ஒப்புதல் அளிக்கும் போதும், பின்வரும் அளவுகோல்களின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(1) நோய், முதுமை, இயலாமை அல்லது அநாதை காரணமாக சமூக சலுகைகளை இழந்த நபர்கள் மற்றும் மூத்த குடிமக்களின் நலன் மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பது.

(2) சமூக நலன்புரிக்கு முக்கியமான ஒழுங்கான முறையில் அரசின் பதிவு செய்யப்பட்ட நலன்புரி மற்றும் மரண உதவிச் சங்கங்கள், மதியோர் சங்கங்கள் மற்றும் முதியோர் அதிகார சபைகளுக்காக உச்சமாக ஒரு இலட்சம் ரூபா என்ற முறையில் அத்தியாவசிய உபகரணங்களை மட்டும் வழங்க முடியும்.

(i) அந்த உபகரணங்கள் பொதுநல நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட வேண்டும், மேலும் அவை சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் பொருட் பதிவேடுகளில் சேர்க்கப்பட வேண்டும்.

(ii) மேற்கூறிய பொருட்களை ஒப்படைக்கும் போது, சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளரின் பரிந்துரையின்பேரில் பொருட்கள் முறையாக ஒப்படைக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட வேண்டும்.

(3) முதியோர் இல்லங்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளை புனர்வாழ்வு செய்யும் இல்லங்களுக்கு தேவையான உபகரணங்களை வழங்குதல்.

(4) முதியவர்கள் மற்றும் பின்தங்கிய சமூகத்தினர் இல்லப்படுதலைத் தடுப்பதற்காக விழிப்புணர்வுத் திட்டங்களை நடாத்துதல் மற்றும் அவ்வாறான முதியவர்கள் மற்றும் பின்தங்கிய சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து பொது சமூக விழிப்புணர்வுத் திட்டங்களை நடாத்துதல். முதியோர் இல்லங்களில் வசிக்கும் பெரியவர்களுக்கு ஆன்மீக வளர்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.

(5) உழைப்புச் செயலணிக்குரிய பின்தங்கிய சமூகம் இல்லப்படுத்துவதைத் தடுக்க சுயதொழில் வாய்பபு உபகரணங்கள் மற்றும் பயிற்சித் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்படலாம். மாகாண சமூக சேவைகள் பணிப்பாளர் அல்லது அவர் பரிந்துரைத்த ஒரு பிரதேச அலுவலரின் பரிந்துரையுடன் ஏற்பாடுகள் செய்யப்படலாம்.

(6) மேல் மாகாணத்தில் மூத்த குடிமக்கள் மற்றும் பின்தங்கிய சமூகங்களுக்கு பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பை வழங்குவதற்குத் தேவையான பயிற்சித் திட்டங்கள் மற்றும் விழிப்புணர்வுத் திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் இது குறித்த விழிப்புடன் இருக்க வேண்டிய ஊழியர்களின் தரம் மற்றும் செயல்திறன் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

(7) குறைந்த வருமானம் பெறும் அங்கவீன நபர்கள் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் மற்றும் நோய்வாய்ப்பட்ட நபர்கள் (புற்றுநோய் , சிறுநீரகநோய் போன்ற) வாழும் விடுகளில் உள்ளவர்களுக்குத் தேவையான வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக உரிய பிரதேசத்தின் சமூக சேவை உத்தியோகத்தர் மற்றும் பிரதேச செயலாளரின் பரிந்துரையின் கீழ் உச்சமாக இரண்டு இலட்சம் ரூபா ஏற்பாட்டினை ஒதுக்கீடு செய்யலாம்.

(8) குறைந்த வருமாணம் கொண்ட குடும்பங்களின், விசேட தேவைகள் உள்ளவர்களுக்கு குறிப்பாக பாடசாலை வயதுப் பிள்ளைகளுக்கு, ரூபா ஒரு இலட்சத்தின் கீழ் அவர்களின் அன்றாட வாழ்க்கையை எளிதாக்கும் விசேட உதவிச் சாதனங்கள் வழங்குதல் அத்துடன். உயர் கல்வியில் ஈடுபட்டுள்ள விசேட தேவைகள் உள்ள பிள்ளைகளுக்கு விசேட கல்வி சாதனங்கள் வழங்குதல். அவை குறிப்பிட்ட தேவைகளுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட வேண்டும். அத்தகைய உபகரணங்களை வழங்கும் போது, மருத்துவ பரிந்துரை மற்றும் சமூக சேவைகள் மாகாணப் பணிப்பாளரின் ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

(9) மேல் மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் விசேட தேவையுடையவர்கள் மற்றும் வயோதிபர்களுக்கான வதிவிட நிறுவனங்களில் வசிப்பவர்களுக்கு சுயதொழில் பயிற்சி நெறிகளை நடாத்துவதற்கு அதிகபட்சமாக ஐம்பதாயிரம் ரூபாவுக்கு உட்பட்டு ஒதுக்கீடு வழங்குதல். (தேவையான பொருட்கள், வளவாளர் படிகள் போன்றவை)

18. தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் விடயத்தின் கீழ் பிரேரணைகளை அடையாளங் காணும் போதும் ஒப்புதல் அளிக்கும் போதும், பின்வரும் அளவுகோல்களின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(1) தோட்டங்களில் வசிக்கும் மக்களின் வாழக்கைத் தரத்தினை உயர்த்துவதற்காக தோட்ட வீதியினை மேம்படுத்துதல், நீர் வசதிகளை வழங்குதல், மின்சார வசதிகளை வழங்குவதன் கீழ் பாடசாலைக் கல்வியினைப் பெறும் பிள்ளைகள் காணப்படும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்காக இருபத்தையாயிரம் ரூபா என்ற உச்ச எல்லையின் கீழ்

அனுசரணை நிதியாக வழங்க முடியும். வருமான நிலை குறித்து கிராம அலுவலரிடமிருந்து சான்றிதழைப் பெற வேண்டும். ஒரு வீட்டிற்கு மின்சாரம் பெறுவதற்குச் செலுத்தப்படும் இந்தத் தொகையை மின்சாரம் வழங்கும் தாபனத்திற்கு செலுத்த வேண்டும்.

(2) தோட்டங்களில் வாழும் மக்களின் வீட்டு மேம்பாட்டுக்கான ஏற்பாடுகளை வழங்கும்போது நேரடி மானியங்களுக்கு ஏற்பாடு செய்ய முடியாது.

(3) பெருந்தோட்ட வீதிகளை அடையாளங் காண்பது முறையான முறையில் செய்யப்பட வேண்டும். இந்த தோட்டங்களுக்கு மத்தியில், கிராமங்களுக்கு பிரவேசிக்க உள்ள வீதிகள் மட்டும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.

19. போக்குவரத்து விடயத்தின் கீழ் பிரேரணைகளை அடையாளங் காணும் போதும் ஒப்புதல் அளிக்கும் போதும், பின்வரும் அளவுகோல்களின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(1) இலங்கைப் போக்குவரத்து சபையினால் பராமரிக்கப்படும் பஸ் தரிப்பிடங்களைத் தவிர முக்கிய பஸ் தரிப்பிடங்களை நிர்மாணித்தல் மற்றும் புதுப்பித்தல்.

(2) வீதியின் இருபுறமும் பயணிகள் தங்குமிடங்களை அமைப்பதன் மூலம் பொதுமக்களுக்கு தரமான சேவையை வழங்குதல்.

(3) மாகாணத்தில் பயணிகள் பேரூந்துகள், முச்சக்கர வண்டிகள், பாடசாலைப் பிள்ளைகளின் போக்குவரத்துச் சேவை பஸ் வண்டிகள் மற்றும் கரியாலய பணியாட்கள் போக்குவரத்துச் சேவை வண்டிகளில் ஏற்படும் சாலை விபத்துக்களைக் குறைப்பதற்கான திட்டங்களைத் தயாரித்து நடைமுறைப்படுத்துதல்.

(4) சாரதிகள் மற்றும் நடத்துனர்களுக்கு சமூகத்திற்கு மிகவும் சிநேகபூர்வமான சேவையை வழங்குவதற்கு பயிற்சியளித்தல் மற்றும் போக்குவரத்துத் துறையில் போதைப்பொருள் தடுப்பு திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

20. விளையாட்டு விடயத்தின் கீழ் பிரேரணைகளை அடையாளங் காணும் போதும் ஒப்புதல் அளிக்கும் போதும், பின்வரும் அளவுகோல்களின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறே பின்வரும் துறைகள் உட்படுமாறு திட்ட பிரேரணைகளை இனங்காண்பது இடம்பெற வேண்டும்.

(1) மாகாணத்தின் பாடசாலைகள் அல்லாத அரச உரிமை உறுதிப்படுத்தப்பட்ட விளையாட்டு மைதானம்/விளையாட்டு நிலையங்களில் வசதிகளை உருவாக்குதல்.

(2) மேல் மாகாணத்தில் விளையாட்டுடன் தொடர்புடைய பகுதியினரின் திறன்களை மேம்படுத்துவதற்காக:

(i) விளையாட்டுக் கல்வித் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.

(ii) விளையாட்டுப் பயிற்சிக் குழுக்களை உருவாக்குதல் மற்றும் பயிற்சித் திட்டங்களை நடாத்துதல்.

(iii) மாகாண, மாவட்ட, பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் கிராம உத்தியோகபூர்வ பிரிவு மட்டத்தில் பல்வேறு நிகழ்வுகளின் படி விளையாட்டு போட்டிகளை நடாத்துதல்.

(3) விளையாட்டுத் துறையில் சிறப்பான திறமைகளைக் காட்டிய விளையாட்டு வீரர்கள் மற்றும் விளையாட்டு வீராங்கனைகளைப் பாராட்ட பிரதேச, மாவட்ட மற்றும் மாகாண மட்டங்களில் மதிப்பீட்டுத் திட்டங்களை நடாத்துதல்.

(4) மாகாண விளையாட்டுப் பணிப்பாளர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட மாகாண அமைச்சின் செயலாளரால் அதிகாரம் வழங்கப்பட்ட விளையாட்டு அதிகாரியின் பரிந்துரையின் பேரில்.

(i) பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்கள் மற்றும் தனியார் அல்லாத உடற்பயிற்சிக் கூடங்களை மேம்படுத்துவதற்காக வருடத்திற்கு அதிகபட்சமாக ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய்க்கு உட்பட்ட விளையாட்டு உபகரணங்களை வழங்குதல்.

(ii) மாகாண மட்டத்திலோ அல்லது தேசிய மட்டத்திலோ விளையாட்டுப் போட்டிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் அல்லது சிறப்புத் திறன்களும் திறமையும் மாகாண அல்லது தேசிய அளவில் கொண்ட விளையாட்டு வீரர்களை

ஊக்குவிப்பதற்காக ஆண்டுக்கு அதிகபட்சம் எழுபத்தையாயிரம் ரூபாய்க்கு உட்பட்ட விளையாட்டு உபகரணங்கள், விளையாட்டு ஆடைகள் மற்றும் பிற பொருட்களை வழங்குதல்.

(iii) குறைந்தபட்சம் ஒரு வருட காலத்திற்கு தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் மாகாணத்தில் உள்ள குறைந்த வருமானம் கொண்ட விளையாட்டு வீரர்களின் ஊட்டச்சத்து தேவைகளை பூர்த்தி செய்ய, தனியார் துறையின் பங்களிப்புடன் மாதாந்தம் அதிகபட்சம் பத்தாயிரம் ரூபாய்க்கு உட்பட்டு ஊட்டச்சத்து உதவிகளை வழங்குதல்.

(iv) இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி சர்வதேச மட்டப் போட்டிகளில் வெற்றி பெறும் மாகாண விளையாட்டு வீர வீராங்கனைகளை ஊக்குவிப்பதற்காக அதிகபட்சமாக ஒரு இலட்சம் ரூபாவிற்கு உட்பட்டு நிதி உதவி வழங்குதல்.

(5) மாகாண மக்களின் உடல் மற்றும் உள ஆரோக்கியத்தை மேம்படுத்த தேவையான திட்டங்களை செயல்படுத்துதல்.

(6) பிரதேச, மாவட்ட மற்றும் மாகாண மட்டங்களில் விளையாட்டுத் துறையின் பகுதியினரை முறையாக ஒழுங்கமைத்தல் மற்றும் அதற்குரிய நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.

21. இளைஞர் விவகார விடயத்தின் கீழ் பிரேரணைகளை அடையாளங் காணும் போதும் ஒப்புதல் அளிக்கும் போதும், பின்வரும் அளவுகோல்களின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(1) இளைஞர் சமூகத்தின் தொழில் திறன்களை வளர்ப்பதற்கான பயிற்சித் திட்டங்களை நடத்துதல்.

(2) நவீன தொழில்நுட்பத்தை இளைஞர்களுக்கு பழக்கப்படுத்தத் திட்டங்களை நடத்துதல்.

(3) இளைஞர் சமூகத்தில் தலைமைத்துவம், அணுகுமுறைகள் மற்றும் ஆளுமைகளை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்ட திட்டங்களை நடத்துதல்.

(4) ஆண்டின் முதல் இரண்டு தவணைகளுக்குள் திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்தல்.

(5) போதைப்பொருள் தடுப்பு நோக்காகக் கொண்ட இளைஞர் சமூகத்தினருக்கான வேலைத்திட்டங்களை நடாத்துதல்.

(6) உள்ளூர் மற்றும் வெளிநாட்டு தொழிற் சந்தைகளை இலக்காகக் கொண்ட தொழில்முறை பயிற்சிக்கு பங்களிப்பு வழங்குதல்.

22. மகளிர் விவகார விடயத்தின் கீழ் பிரேரணைகளை அடையாளங் காணும் போதும் ஒப்புதல் அளிக்கும் போதும், பின்வரும் அளவுகோல்களின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(1) சுயதொழிலில் ஈடுபடும் அல்லது ஈடுபட எதிர்பாக்கும் குறைந்த வருமானம்பெறும் பெண்களுக்கு 20% ஆன பயனாளிகளின் கீழ் அரச பங்களிப்பில் ரூபா ஒரு இலட்சம் என்ற உச்சமான எல்லையின் கீழ் ஏற்பாடுகளை வழங்குதல்.

(2) பாதிக்கப்பட்ட பெண்களை அடையாளங் காணவும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்களை முன்மொழிதல்.

(3) பொருளாதார, சமூக மற்றும் அரசியல் சூழல்களில் முக்கியத்துவம் பெற ஆளுமை மேம்பாடு மற்றும் தலைமைத்துவ பட்டறைகளை நடத்துதல்.

(4) பெண்கள் ஆலோசனை நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல்.

23. கூட்டுறவு அபிவிருத்தி விடயத்தின் கீழ் பிரேரணைகளை அடையாளங் காணும் போதும் ஒப்புதல் அளிக்கும் போதும், பின்வரும் அளவுகோல்களின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(1) வாடிக்கையாளர்களை ஈர்ப்பதற்காக வியாபார நிலையங்களின் அபிவிருத்தி மற்றும் தரமான பொருட்களின் விற்பனை மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்துதல்.

(2) கூட்டுறவுத் துறையில் ஈடுபடும் அதிகாரிகளின் திறன்களை வளர்ப்பதற்கும் பாரம்பரிய பயிற்சி மற்றும் திட்டங்களிலிருந்து விலகி போட்டிப் பயிற்சி திட்டங்களை திட்டமிடுதல்.

(3) கிராமிய துறையில் கூட்டுறவு நிதித் துறையின் நிதியை முதலீடு செய்ய ஏற்ற திட்டங்களை சமர்ப்பித்தல்.

(4) பாடசாலைப் பிள்ளைகளுக்கு கூட்டுறவு விடய அறிவை வழங்க பாடசாலை கூட்டுறவு சங்கங்களை பதிவு செய்வதற்கான திட்டங்களை முன்மொழிதல்.

24. நீர் வழங்கல் மற்றும் வடிகால் என்ற விடயத்தின் கீழ் பிரேரணைகளை அடையாளங் காணும் போதும் ஒப்புதல் அளிக்கும் போதும், பின்வரும் அளவுகோல்களின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(1) குடிநீர் வசதிகளை வழங்க சமூகத்திற்கு பொருத்தமான நீர் வசதிகளை வழங்குதல்.

(2) சமூக நீர்த் திட்டங்களின் கீழ் நீர் வசதிகளை வழங்குதல்.

(3) குடிநீர் மற்றும் பிற நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் பொதுக் கிணறுகளின் கட்டுமானம் மற்றும் மேம்பாடு.

(4) தேவைக்கேற்ப பொருத்தமான இடங்களில் குழாய் கிணறு வசதிகளை நிறுவுதல்.

(5) நீர் மூலாதாரங்களின் நம்பகத்தன்மையை கண்டறிதல் மற்றும் நீரின் தரத்தை பரிசோதித்தல்

25. கடற்றொழில் என்ற விடயத்தின் கீழ் பிரேரணைகளை அடையாளங் காணும் போதும் ஒப்புதல் அளிக்கும் போதும், பின்வரும் அளவுகோல்களின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(1) கிராமப்புற மக்களின் ஊட்டச்சத்து பற்றாக்குறைகளைக் குறைப்பதற்காகவும் மற்றும் உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்துவதற்காகவும், கடல் நீர் மற்றும் சிறிய அளவான நன்னீர் மீன் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு கடற்றொழில் உபகரணங்கள் மற்றும் பொருட்களைப் பயனாளிகளின் பங்களிப்பில் 30% இன் கீழ் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை உச்சமாக ரூபா ஒரு இலட்சத்தினை வழங்குதல்.

(2) மீன் விற்பனையை ஊக்குவிக்கும் திட்டங்களை சமர்ப்பித்தல்.

(3) மேலதிக உற்பத்திப் பொருட்களை சேமிப்பதற்கும் மற்றும் அதிக காலம் பாதுகாப்பாக வைப்பதற்காக வசதிகளை ஏற்படுத்தத் திட்டங்களை திட்டமிடல்.

(4) அலங்கார மீன் கைத்தொழிலை மேம்படுத்துவதற்கான திட்டங்களை சமர்ப்பித்தல்.

(5) நன்னீர் மற்றும் வாவிகளை அண்டிய நீர் வாழ் உயிரினங்களின் விரிவாக்கத்திற்கான பிரேரணைகளை சமர்ப்பித்தல்.

(6) மீன்வளத் தொழிலுடன் தொடர்புடைய பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தித் தொழில்களை மேம்படுத்துதல்.

(7) மீன்பிடி சமூகத்திற்கான பயிற்சித் திட்டங்கள் மற்றும் கருத்தரங்குகளை நடத்துதல்.

(8) மீன்பிடி சமூகத்தின் சமூக நலனுக்கான திட்டங்களை சமர்ப்பித்தல்.

(9) கடற்றொழல் நடவடிக்கைக்குப் பயன்படுத்தப்படும் அமைச்சுக்கு சொந்தமான கட்டடங்களின் கட்டுமானம் மற்றும் மேம்பாட்டு நடவடிக்கை.

26. கிராம அபிவிருத்தி என்ற விடயத்தின் கீழ் பிரேரணைகளை அடையாளங் காணும் போதும் ஒப்புதல் அளிக்கும் போதும், பின்வரும் அளவுகோல்களின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(1) உள்ளூராட்சி அதிகாரப் பிரதேசத்துக்குள் அமைந்துள்ள தனிப்பட்ட சொத்துக்கள் அல்லாத உறுதியாக இனங் காணப்பட்ட சிறிய வீதிகள், அடையாளங் காணப்பட்ட, கால்வாய்கள், சிறிய பாலங்கள் மற்றும் பல்வெட்டுக்கள் போக்குகள் கிராமிய சந்தை வசதிகள், சமூக நீர் திட்டங்க்ள உள்ளிட்ட கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.

(2) மாகாண சபையில் ஒழுங்காக பதிவு செய்யப்பட்ட கிராம அபிவிருத்தி விடயப்பொறுப்பு அமைச்சின் செயலாளரினால் அதிகாரம் வழங்கப்படும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரின் பரிந்துரையின் கீழ் இரண்டு வருடங்களை விட

தொடர்ச்சியாகப் பேணப்படும் மற்றும் தற்போது தேவையின் அளவுக்கிணங்க கதிரைகள் ஒன்று சேர்க்கக் கூடிய அட்டைகள் (நடமாடும் கூடாரம்) இல்லாத கிராம அபிவிருத்திச் சங்கம், சனச சங்கத்திற்கு ரூபா இரண்டு இலட்சம் என்ற உச்ச எல்லையின் கீழ் உபகரணங்களை வழங்குதல்.

(3) கிராம மட்டத்தில் நிறுவப்பட்ட தன்னார்வ சங்கங்களை அணிதிரட்டி ஒருங்கிணைப்பதன் மூலம் சமூக மேம்பாட்டுக்குத் தேவையான ஒரு வலையமைப்பை உருவாக்குதல் மற்றும் அறிவு, திறன்கள் மற்றும் எண்ணங்களின் அபிவிருத்தியினை வளர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுத்தல்.

(4) கிராம அபிவிருத்திச் சங்கங்கள் போன்ற பொது இடங்களுக்கு நீர் மற்றும் மின்சார வசதிகளை வழங்குவது ரூபா எழுபத்தையாயிரம் என்ற உச்ச எல்லையின் கீழ் வழங்க முடியும். கிராம அபிவிருத்திச் சங்க அலுவலரின் பரிந்துரையுடன் உரிய பட்டியல்களைச் செலுத்துவது தொடர்பான முறையான நடைமுறையுடன் உறுதிப்படுத்துல் வழங்கப்பட வேண்டும்.

(5) கிராமப்புற அபிவிருத்தி என்ற விடயத்தின் கீழ் கிராமிய மட்டத்தில் காணப்படும் உள்ளூராட்சி வீதிகளுக்காக வீதிகள் அமைச்சினால் நிதி ஒதுக்கும் போது, திட்டத்தை செயல்படுத்துவதற்கு முன்பு செயல்படுத்தும் அதிகாரியினால் உள்ளூராட்சி அதிகார சபையின் சம்மதத்தைப் பெற வேண்டும்.

(6) மாகாண தையல் ஆலோசகர்களின் கீழ் தயாரிக்கப்பட்ட பொருட்களுக்கான உள்ளூர்/வெளிநாட்டு கண்காட்சி வசதிகள் மற்றும் சந்தையை ஏற்படுத்திக் கொடுத்தல்.

(7) தையல் மையங்கள் தொடர்பான பயிற்சியாளர்களின் தயாரிப்புக்களை சந்தைக்கு அனுப்பத் தேவையான வசதிகளை வழங்குதல்.

(8) தையல் தொழிலுக்கு நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துதல் மற்றும் மையங்களுக்கு உபகரணங்கள் வழங்குதல்.

(9) நுண் தொழில்களுக்கு தேவையான பயிற்சி, தொழில்நுட்பம் போன்றவற்றை வழங்குதல்.

(10) கிராம அபிவிருத்தி அலுவலர்களின் பயிற்சி தேவைகளுக்கான வசதிகளை வழங்குதல்.

(11) கிராம அபிவிருத்திச் சங்கங்களின் குறைந்த வருமானம் கொண்ட உறுப்பினர்களின் குடும்பங்களின் ஊட்டச்சத்தை உயர்த்துதல் மற்றும் கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களின் தலையீட்டின் மூலம் போதைப்பொருள் தடுப்பு நிகழ்ச்சிகளை நடத்துதல்.

27. சுற்றுலா மேம்பாட்டு என்ற விடயத்தின் கீழ் பிரேரணைகளை அடையாளங் காணும் போதும் ஒப்புதல் அளிக்கும் போதும், பின்வரும் அளவுகோல்களின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(1) மாகாணத்தில் சுற்றுலா கண்கவர் தலங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.

(2) சுற்றுலா கண்கவர் தலங்கள் மற்றும் சுற்றுலா கைத்தொழில்துறை தொடர்பான விளம்பரங்களை மேற்கொள்வது.

(3) சுற்றுலாத் துறையுடன் தொடர்பான தொழில்களை மேம்படுத்துதல்.

(4) சுற்றுலாத் துறை தொடர்பான தரமான சேவைகளை வழங்க பயிற்சித் திட்டங்களை நடத்துதல்.

(5) சர்வதேச சுற்றுலா தினத்தைக் கொண்டாடுவதற்கு இணைந்த வகையில் திட்டங்களை செயல்படுத்துதல்.

(6) சுற்றுலாப் பயணிகளை இலக்காகக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் தரத்தை அதிகரிக்க பயிற்சித் திட்டங்களை நடத்துதல் மற்றும் சந்தைப்படுத்துதல் மேம்பாடு.

(7) சுற்றுச்சூழல் சுற்றுலாத் துறையை மேம்படுத்துதல் மற்றும் தொடர்புடைய உள்கட்டமைப்பு மேம்பாடு.

(8) நிலையான சமூகம் சார்ந்த மேம்பாட்டுத் திட்டங்களுக்கு தேவையான உள்கட்டமைப்புகளை வழங்கதல்.

(9) மாகாண சபைக்குச் சொந்தமில்லாத மத்திய அரசாங்கக் காணிகளில் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களுக்கான மானியங்கள் வழங்கப்படும் போது காணிக்குச் சொந்தமான சம்மந்தப்பட்ட தாபனங்களிடமிருந்து இணக்கத்தினை பெற்றுக்கொள்ள வேண்டும்.

28. விலங்குற்பத்தி விடயத்தின் கீழ் பிரேரணைகளை அடையாளங் காணும் போதும் ஒப்புதல் அளிக்கும் போதும், பின்வரும் அளவுகோல்களின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(1) மக்களுக்கு இறைச்சி, பால் மற்றும் முட்டைகளை வழங்க ஆரோக்கியமான விலங்குகளை பேணிச் செல்லுதல்.

(2) உயர்தர விலங்குகளை உற்பத்தி செய்வதற்கும் உற்பத்தியை அதிகரிப்பதற்கும் தொழில்நுட்பத்தை பயன்படுத்துதல் மற்றும் விவசாயிகளிடையே பிரபலியப்படுத்துவதற்காக திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பித்தல்.

(3) கால்நடை வளர்ப்ப விவசாயிகளின் வருமான அளவை அதிகரிக்கத் தேவையான திட்டப் பிரேரணைகளை செயல்படுத்துதல்.

(4) இந்த விடயங்கள் தொடர்பாக உள்ளீடுகள் அல்லது விலங்குகளின் நேரடி மானியமாக வழங்கும் பொதுத் தொழில்நுட்பக் குழுவின் பரிந்துரைக்கு இணங்க 30% பயனாளிகளின் பங்களிப்பின் உச்ச எல்லையின் கீழ் ரூபா ஐம்பதாயிரத்தினை வழங்கத் திட்டமிடல் அத்துடன் மேலதிகமாக பின்வரும் விடயங்களின் கீழ் நேரடி மாணியத்தினை வழங்கும் போது அரசின் உச்சமான பங்களிப்பு பின்வருமாறு வழங்க முடியும்.

(i) மூன்று கால்நடைகளின் காலைகளை அமைப்பதற்கு அதிகபட்சம் 30% ஆகுமாறு அரசின் உச்சரீதியிலான பங்களிப்புடன் ரூபா ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ஆகுமாறு நிதி ரீதீயிலான உதவி அல்லது பொருளுதவி வழங்க முடியும்.

(ii) ஐந்து கால்நடைகளின் மாட்டுக் காலையினை நிர்மாணிக்க 30% ஆகுமாறு அரசின் உச்சரீதிலான பங்களிப்புடன் ரூபா இரண்டு இலட்சம் ஆகுமாறு நிதி ரீதியிலான உதவி அல்லது பொருளுதவி வழங்க முடியும்.

(iii) ஒரு பால் மாடு அல்லது எருமை மாட்டினை வாங்கும் போது 30% ஆகுமாறு அரசின் உச்சரீதிலான பங்களிப்புடன் ரூபா ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ஆகுமாறு நிதி ரீதியிலான உதவி அல்லது விலங்குகளை வழங்க முடியும்.

(5) பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தி மேம்பாட்டிற்கான திட்ட முன்மொழிவுகளைச் சமர்ப்பித்தல்.

(6) சுற்றாடல் மாசடைதல் குறையுமாறு கால்நடைப் பண்ணைகளைப் பேணிச் செல்லுதல் மற்றும் கழிவு பொருட்கள் அகற்றுவதற்காகத் திட்டங்களை தயாரிப்பதன் கீழ் நேரடி மானியமாக 30% பயனாளிகளின் பங்களிப்பின் கீழ் எட்டு கனமீட்டர் உயிர்வாயுப் பிரிவிற்காக 70% அரச பங்களிப்பின் கீழ் ரூபா ஒரு இலட்சத்து நாற்பதாயிரம் என்ற உச்சளவில் வழங்க முடியும்.

(7) பால் சேகரிப்பு மையங்கள் மற்றும் களஞ்சிய வசதிகளை அமைப்பதற்கான திட்டங்களைத் தயாரித்தல்.

(8) கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் மற்றும் அதிகாரிகளுக்கு பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களை நடத்துதல்.

(9) சிறிய மற்றும் நடுத்தர தனியார் விலங்குப் பண்ணைகளை நிறுவுதல் மற்றும் பராமரித்தல் தொடர்பான திட்டங்களை செயல்படுத்துதல்.

(10) விலங்கு உற்பத்தி தொடர்பான நடவடிக்கை மற்றும் அதனுடன் தொடர்புடைய கட்டடங்களின் கட்டுமானம், மேம்பாடு மற்றும் புதுப்பித்தல் நடவடிக்கையினை மேற்கொள்ளல்.

(11) மேல் மாகாணத்தில் பண்ணை விலங்குகளின் நோய்களைத் தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்குமான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்

(12) கால்நடை உணவு உற்பத்தி திட்டங்களை செயல்படுத்துதல்.

29. இந்த விதிகள் நடைமுறைக்கு வரும் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வருமாறு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2190/25 ஆம் இலக்க, மற்றும் 2020, ஓகத்து மாதம் 25 ஆம் திகதி அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் உள்ளடக்கப்பட்ட 2020, ஓகத்து மாதம் 24 ஆந் திகதி மேல் மாகாண சபை நிதியத்திற்குரிய அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பதற்கும், அந்தத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான உரிய விதிகள் இங்கு இல்லாதொழிக்கப்படுகின்றன.

EOG 10- 0186

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.